# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். ராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைச்செல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**

ஊடகச்செய்தி எண்.3/2017 நாள்,18.01.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க வலியுறுத்தியும், போராடும் மாணவர்களுக்கு ஆதரவாகவும் 19-01-2017 அன்று தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

ஊடகச்செய்தி

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடத்த முடியாமல் போயுள்ளதை தமிழ்ச் சமூகமே கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 'இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு கண்டிப்பாக நடத்தப்படும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன', என்று மத்திய மாநில அரசுகளை சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் கூறி. கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றனர். உச்சநீதிமன்றத்தின் தடை உள்ளதால் ஜல்லிக்கட்டு நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இப்போது கூறும் அமைச்சர்களும், அரசுகளும் இந்த உண்மை ஏற்கெனவே தெரிந்திருந்த நிலையில் எப்படி 'கண்டிப்பாக நடக்கும்' என்று வாக்குறுதி அளித்தார்கள் என்று மக்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எப்போதும் போல் ஜனவரி மாதத்தில் ஏதாவது சாக்கு போக்கு சொல்லி தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணிய அரசியல்வாதிகளின் பொய்முகங்கள் இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன.

அரசுகளையும் அவற்றின் பாராமுகங்களையும் அமைச்சர்களின் வாக்குறுதிகளையும் அவற்றின் பொய்மைத் தன்மைகளையும் மக்கள் இப்போது தெளிவாக உணரத் தலைப்பட்டுவிட்டனர். தமிழர்களின் 5000 ஆண்டு பண்பாடு கலாச்சாரம் இவற்றை ஒழித்துவிட நினைக்கும் பீட்டா போன்ற அமைப்புகளையும், இது காளைகளை வைத்து விளையாடும் விளையாட்டல்ல, தமிழனின் அடையாளம் தமிழனின் பாரம்பரியம், என்பதை உச்சநீதிமன்றத்தில் எடுத்துரைக்க விட்டுவிட்ட மத்திய மாநில அரசுகளின் அலட்சியப் போக்கினையும் மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள் என்பதன் அர்த்தம்தான் இன்று தமிழகமெங்கும் தன்னெழுச்சியாக திரண்டு வந்திருக்கும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் போராட்டங்கள்.

உச்சநீதிமன்ற தடை உள்ளது என்று கூறும் அமைச்சர் பெருமக்கள் அரசியல் வாதிகள், உச்சநீதிமன்றம், காவிரி நீரை திறந்துவிடப் பணித்தும் அதைச் செய்யாத கர்நாடக அரசின் மீது மத்திய அரசோ உச்சநீதிமன்றமோ என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை கூறாமல் மௌனிக்கிறார்கள் அல்லது மறுக்கிறார்கள். காவிரிநீர் பிரச்னையில் கர்நாடக முதன்மை அமைச்சர் சட்டமன்றத்தைக்கூட்டி உச்சநீதிமன்ற தீர்ப்புக்கெதிராக தன்னுடைய ஆட்சியே போனாலும் பரவாயில்லை என்று தீர்மானம் இயற்றிய நிகழ்வுகளை யாரும் மறந்திருக்க முடியாது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். ராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைச்செல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**




ஆனால் இங்கே ஆளும்கட்சி தன்னுடைய இனத்தின் அடையாளமாக பாரக்கப்படும் ஒரு வீரவிளையாட்டை கலாச்சாரத்தை கட்டிக்காக்க முன்வராமல் பதவி அதிகார ஆசைகளுக்காக எதையும் செய்யாமலிருப்பதுடன் போராடும் இளைஞர்களை போலீஸ் தடியடி கொண்டும், சிறையிலடைத்தும், மின்சாரத்தைத் துண்டித்தும் போராட்டங்களை அடக்கி ஒடுக்கப் பார்ப்பது கண்டனத்திற்குரியது.

எவ்வித அரசியல் கலப்புமின்றி இளைஞர்களும் பெண்களும் மாணவர்களும் தன்னெழுச்சியாக நடத்தும் இந்த போராட்டம் தொலைந்து போய்க்கொண்டிருக்கும் தமிழனின் கலாச்சார பாரம்பரிய அடையாளத்தை மீட்டெடுப்பதற்கான போரட்டம் என்பதால் தமிழர்கள் அனைவரும் ஜாதி மதம் இன வேற்றுமைகளையும் கடந்து ஒன்று திரண்டு இதை ஆதரிக்க வேண்டியது தார்மீகக் கடமையாகும் என்பதை அரசு ஊழியர் சங்கமும் உணர்ந்துள்ளது. எனவே இளைய தலைமுறை நடத்தும் இந்த அரசியல் கலப்பற்ற ஜாதி மதம் இனம் கடந்த தன்னெழுச்சியான போராட்டத்தில் அரசு ஊழியர் சங்கமும் தன்னை இணைத்துக் கொண்டு 19.01.2017ம் தேதி மாவட்ட / வட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென தீர்மானித்துள்ளது. தமிழகத்தில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் அலுவலர்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு ஜல்லிக்கட்டு என்ற தமிழனின் பாரம்பரியமிக்க விளையாட்டுக்கான தடையை விலக்க ஆதரவளிப்பார்கள்.

**(மு. அன்பரசு)**
பொதுச்செயலாளர்

பெறுநர்

ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்